# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 60/2019** **Date:07.08.2025**

**(DW1)- கங்காதரன்**

வாதி தரப்பு **குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** எனது மனைவி 1ம் பிரதிவாதியின் பெயரில் தங்கமணியின் முதல் மனைவியான கனகாவும், கனகா மூலம் தங்கமணிக்கு பிறந்த டி கே விக்னேஷ்வர ராவும் வாசாஆ. 4 படி ஒரு விலைபத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் எனது மனைவி தங்கமணிக்கு 3 சென்ட் நிலம் விலை கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ. 4 ல் மேற்படி நிலம் கொடுத்தது போக 1 1/2 ஏர் மனையில் 2 சென்ட் நிலம் கிரயம் கொடுத்ததாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**2.** 1 1/2 ஏர் மனை என்றால் மூன்றே முக்கால் சென்ட் என்றால் அது பற்றி தெரியாது. தங்கமணிக்கு உரிமைப்பட்ட 7 1/2 சென்ட் நிலத்தில் எனக்கு கொடுத்த 3 சென்ட் நிலம் போக 4 1/2 சென்ட் மீதம் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ. 4 ஆவணத்தில் தங்கமணி மற்றும் பிற நபர்களுக்கு இரணியல் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண் 3281/1991 மூலம் புதிய புல எண் 815/4C1 ல் உரிமையுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பத்திர எண் 3281/1991 ஆவணம் ஒரு வழிப்பாதைக்கான ஆவணம் என்றாலும் அது பொது பயன்பாட்டிலுள்ள ஆவணம் என்றாலும் அது தனிநபருக்கு உரிமைப்பட்டது அல்ல என்றாலும் எனவே பத்திர எண் 3281/1991 சொத்தை தங்கமணியால் விலைக்கு கொடுக்க முடியாது என்றால் சரியல்ல, கோபி மற்றும் தங்கமணிக்கும் சேர்ந்த இடம் பொது வழிப்பாதையாகும்.

**3.** பட்டிகை 2ம் இன சொத்து வழக்கு பட்டிகை சொத்தான 15 சென்ட் நிலத்தில் அடங்காது என்றால் சரிதான். புல எண் 815/4C1 ல் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. எனவே வாசாஆ. 4 ஆவணத்தில் மேற்படி புல எண் 815/4C1 ஐ பட்டிகை 2ம் இன சொத்தாக தப்பாக காட்டப்பட்டுள்ளது என்றாலும் வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டுமென்று வேண்டுமென்றே காட்டப்பட்டுள்ளது என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது. எனவே வாசாஆ. 4 ஆவணத்தில் 2ம் பட்டிகை சொத்தாக காட்டப்ப்படடுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. வாசாஆ,.4 ஆவணத்தில் பட்டிகை 2ம் இன சொத்திற்கான முந்தைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லையென்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**4.** வாசாஆ. 4 ஆவணத்தில் பட்டிகை புல எண் சொத்து 15 சென்ட் தங்கமணிக்கும் 1ம் வாதிக்கும் வாய்மொழி பாகம் ஏற்பட்டு விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தங்கமணிக்கு மீதமிருந்த 4 1/2 சென்ட் நிலத்தில் உள்ள 2 சென்ட் நிலத்தை வாசாஆ,.4 ஆவணத்தில் 1ம் இன சொத்தாக விக்னேஷ்வரராவ், 2 ம் பிரதிவாதிக்கும் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாசாஆ. 4 ஆவணம் மூலம் மொத்தத்தில் 2 1/2 சென்ட் நிலம் நாங்கள் எழுதி வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். எனவே மேற்படி தங்கமணிக்கு பாத்தியப்பட்ட 7 1/2 சென்ட் நிலத்தில் 5 1/2 சென்ட் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான், அதில் 1/2 சென்ட் பாதையாகும்.

**5.** மேற்படி பாதையாக குறிப்பிடப்பட்டுள்ள 815/4C1 சொத்தில் தங்கமணிக்கோ, தங்கமணி வாரிசுக்கோ உரிமையுள்ளது என்பதை காட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் நிரூபிக்கவும் முடியாது என்றாலும் சரியல்ல. தங்கமணியின் முதல் மனைவி கனகா 3ம் பிரதிவாதி பிறந்தவுடன் அவரது கணவருடன் சண்டையிட்டு பிரிந்து சென்று விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே தங்கமணி விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து வழக்கு முடிவடைவதற்கு முன்பே மணிமேகலை என்ற பெண்ணை 2வதாக

திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல, தங்கமணிக்கு ஒரே மனைவி உள்ளார்.

**6.** 2 வது முறைகேடான திருமணத்தின் பயனாக பிரியா, பிரின்ஸ் என்ற 2 குழந்தைகள் தங்கமணிக்கு பிறந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 2 வது முறைகேடான திருமணத்தின் பயனாக பிரியா, பிரின்ஸ் என்ற 2 குழந்தைகள் தங்கமணிக்கு பிறந்தார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முறையற்ற திருமணத்தின் வழியாக பிரியா, பிரின்ஸ் என்ற 2 குழந்தைகள் தங்கமணிக்கு பிறந்திருந்தாலும் அவர்களுக்கும் தங்கமணியின் சொத்தில் உரிமையுண்டு என்றால் சரியல்ல. ஆகையால் தங்கமணியின் 7 1/2 செண்ட் சொத்தில் 2 செண்ட் சொத்து பிரியா, பிரின்ஸ் வழக்கின் 2 ம் வாதிக்கு வாசாஆ . 3 மூலம் உரிமைமாற்றம் செய்து விட்டு அதற்கு பதிலாக 2 ம் வாதிக்கு பாத்தியப்பட்ட குருந்தன்கோடு கிராமம் புதிய புல எண் 434/8 உள்ள சொத்தை பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**7.** பிரியா, பிரின்ஸ் வாரிசுரிமை சட்டப்படி 4 1/2 செண்ட் நிலத்தில் 1.800 செண்ட் தான் உரிமையுண்டு , ஆனால் அவர் அதிகமாக 0.200 செண்ட் நிலம் அதிகமாக கொடுத்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அதிகமாக கொடுத்ததால் 2, 3 ம் பிரதிவாதிகள் பட்டிகை புல எண் சொத்து மற்றும் சில சொத்துகளை பொறுத்து OS.No. 63/2007 என்ற பாக பிரிவினை வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றாலும் அதில் எனது மனைவியும் , பிரியா, பிரின்ஸ்ம் பிரதிவாதிகள் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் வாரிசுப்படி அங்கீகரிக்கப்படவில்லை. OS.No. 63/2007 என்ற வழக்கில் வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து ஏற்கனவே பாகம் ஏற்பட்டதால் மீண்டும் பாகம் செய்ய தேவையில்லையென்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**8.** மேற்படி வழக்கில் பிரியா, பிரின்ஸ் வாரிசுகள் அல்ல என்று முடிவு செய்யப்படவில்லையென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. OS.No. 63/2007 என்ற

வழக்கில் இந்த வழக்கின் 2, 3ம் பிரதிவாதிகள் ஆஜராகவில்லையென்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வழக்கில் 2, 3ம் பிரதிவாதிகள் பிரியா, பிரின்ஸ் ஐ தங்கமணியின் வாரிசுள் இல்லையென்றும் அவர்களுக்கு பட்டிகை சொத்தில் உரிமைவராது என்றும் எனது மனைவிக்கு கொடுக்கப்பட்ட கிரயம் சரியான கிரயம் தான் என்றும் தங்கமணிக்கு கூடுதல் சொத்து உண்டு என்றும் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லையென்றால் அது பற்றி தெரியாது.

**9.** மேற்படி OS.No. 63/2007 வழக்கின் தீர்ப்பு மீது மேல் முறையீடு செய்யப்பட்டு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். தங்கமணிக்கு கூடுதல் சொத்து இருந்தால் அதை உரிமைகோருவது 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தான் தவிர என்னால் கோர முடியாது என்றாலும் அதை நான் ஆட்சேபிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ. 1 முதல் வாசாஆ. 4 ஆவணங்களில் வாதிகளுக்கு கூடுதல் சொத்திருந்தால் அது அவர்களுடையதனி சொத்து என்றாலும் அதை காரணம் காட்டி கூடுதல் சொத்து உரிமை கொண்டாட எனக்கு உரிமையில்லையென்றால் சரியல்ல.

**10**. தங்கமணிக்கு பாத்தியப்பட்ட 7 1/2 சென்ட் நிலத்தில் எனக்கு கிரயம் கொடுத்த 3 சென்ட் நிலம் போக 4 1/2 சென்ட் நிலத்தில் அவரது தாயாருக்கு 0.900 சென்டும் , மனைவியான 2ம பிரதிவாதிக்கு 0.900 சென்டும், மகனான 3ம் பிரதிவாதிக்கு 0.900 சென்டும், முறையற்ற திருமணத்தில் பிறந்த பிரியா, பிரின்ஸ் தலா 0.900 சென்டும் வாரிசு உரிமை சட்டப்படி உரிமைப்படும் என்றால் சரியல்ல, பிரியா, பிரின்ஸ் அங்கீகரிக்கப்படாத வாரிசுகள் ஆவர். 2,3 பிரதிவாதிகளுக்கு 1.800 சென்டு தான் பாத்தியம் என்றாலும் அதை 2 சென்டாக எனக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் எனவே 0.200 சென்ட் நிலத்தை பொறுத்து எனக்கு கொடுத்த கிரய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.

**11.** மேற்படி வாசாஆ. 4 ஆவணத்தில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 0.500 சென்ட் சொத்தை நான் கிரயம் பெற்றுள்ளதால் மேற்படி ஆவணத்தில் உள்ள 2 ம் பட்டிகையும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)